படிவம் 1

# இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் முக்கிய திருவிழாக்கள் நாட்காட்டி

## (Calendar Of Events)

மாவட்டத்தின் பெயர் – கோயம்புத்தூர்

| வ. எண் | திருக்கோயிலின் பெயர் மற்றும் தலவரலாறு / அமைவிடம் சுருக்கமாக | முக்கிய திருவிழாக்கள் மாதம் வாரியாக | திருவிழாக்களின் முக்கிய நிகழ்வுகள் தேதி வாரியாக | | திருவிழாவின் சிறப்புகள் சுருக்கமாக | தொலைபேசி எண்கள் | Website & Email id |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | **அருள்மிகு பட்டீசுவரசுவாமி திருக்கோயில், பேரூர், கோயம்புத்தூர் மாவட்டம்**<br>ஆதிபுரி, பட்டிபுரி, தேனுபுரி, பிப்பிலாரண்யம் என்று பல பெயர்களில் அழைக்கப்படும் பேரூர் பிறவா நெறித்தலம் ஆகும். இங்கு எழுந்தருளியருக்கும் இறைவர் ஸ்ரீ பட்டீஸ்வரசுவாமி, அம்பாள் பச்சைநாயகியாா் இறைவன் காமதேனு என்னும் தெய்வ பசுவிற்கு அதன் விருப்பத்தை நிறைவேற்றி முக்தி அளித்ததால், பிறவா நெறித்தலம் என்ற பெயர் பெற்றது. திருப்பேரூர் கொங்கு நாட்டு வைப்புத் தலங்களுள்ளே பிரசித்தி பெற்ற ஒன்றாக விளங்குகின்றது. இது பண்டைக்காலத்தில் அரசவனமாக இருந்தது. இவ்வனத்தில் பெருமானார் புற்றுக்களால் சூழப்பெற்றிருந்தார். படைப்பு தொழிலைச் செய்யும் ஆற்றலைப் பெறவிழைந்த காமதேனு இங்கு வந்து பெருமானை வழிபட்டுக் கொண்டிருந்தது. ஒருநாள் தனது கன்றின் கால் புற்றின் உள்ளே அகப்பட்டுக் கொள்ள, அதை விடுவிக்க தன் கொம்புகளால் புற்றைக் குத்தி களைந்தெடுத்த போது சுயம்பு மூர்த்தியின் மீது கன்றின் கால் சுவடும், தனது கொம்பின் சுவடும் பட்டு இரத்தம் வரக்கண்டு வருந்திற்று. இறைவன் அச்சுவடுகளைத் தமக்கு அடையாளமாக விரும்பி ஏற்றுக் கொள்வதாகக் கூறி, காமதேனுவின் விருப்பத்தை கருவூரிலே முற்றுவிக்கச் செய்வதாகஅருளினாா். | ஏப்ரல் மாதம் 31.03.2017 முதல் 09.04.2017 வரை | 31.03.2017 பங்குனி 18<br>04.04.2017 பங்குனி 22<br>06.04.2017 பங்குனி 24<br>08.04.2017 பங்குனி 26<br>09.04.2017 பங்குனி 27 | கொடியேற்றம்<br>ரிஷபவாகன திருக்காட்சி அறுபத்து மூவர் திருகாட்சி,<br>பிற்பகல் 3.15 மணிக்கு மேல் திருத்தேரோட்டம்<br>இந்திர விமான தெப்பத் திருவிழா திருவீதி உலா<br>பங்குனி உத்திரம் தரிசன காட்சி | பிரம்மா, விஷ்ணு, அதிமூர்க்கம்மன் காலவமுனிவர் ஆகியோர்களுக்கு ஸ்ரீ நடராஜர் ஆனந்த திருநடன தரிசனம் கொடுத்தது பங்குனி உத்திர தினம் ஆகும். பங்குனி உத்திரத் திருநாள் ஆண்டுதோறும் பங்குனி உத்திரத் தரிசன திருவிழாவாக கொண்டாடப்படுகிறது. | 0422–2607991 | Website<br>www.perurpatteeswarar.tnhrce.in<br>Email<br>patteeswararperur@tnhrce.org |
| 2 | | ஏப்ரல் மாதம் | 14.04.2017 சித்திரை 1–ம் தேதி | தமிழ் வருடப்பிறப்பு | ஸ்ரீ ஹேவிளம்பி வருடப்பிறப்பு காலை அருள்மிகு பட்டீசுவரசுவாமி சிவகாமி அம்மனுக்கு அபிஷேகம் காலை 10.30 மணிக்கு அருள்மிகு பட்டிவிநாயகருக்கு அபிஷேகம் மாலை பஞ்சாங்கம் படித்தல் | | |

| வ. எண் | திருக்கோயிலின் பெயர் மற்றும் தலவரலாறு / அமைவிடம் சுருக்கமாக | முக்கிய திருவிழாக்கள் மாதம் வாரியாக | திருவிழாக்களின் முக்கிய நிகழ்வுகள் தேதி வாரியாக | | திருவிழாவின் சிறப்புகள் சுருக்கமாக | தொலைபேசி எண்கள் | Website & Email id |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | காமதேனு தங்கி வழிபட்டதால் திருவான்பட்டியுடையார் என்ற திருப்பெயரோடு, இறைவன் இங்கே வழிபடும் ஆன்மாக்கட்கு முக்தியின்பத்தை அருள் செய்து விளங்குகிறார். இன்றும் இவ்வடையாளங்கள் திருமேனியில் காணப்படுகின்றன. | ஏப்ரல் மாதம் | 20.04.2017 சித்திரை 7–ம் தேதி | ஸ்ரீ நடராஜர் அபிஷேகம் | சித்திரை திருவோணம் நட்சத்திரத்தில் ஸ்ரீ நடராஜர் சிவகாமி அம்மனுக்கு அபிஷேகம். 12.30 மணிக்கு | 0422–2607991 | Website www.perurpatteeswarar.tnhrce.in<br>Email patteeswararperur@tnhrce.org |
| 4 | இத்தலத்தில் அமைந்துள்ள காஞ்சிமாநதி அல்லது நொய்யல் நதி, பிரம்ம தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், சிருங்கதீர்த்தம், என்பவை சிறப்பான தீர்த்தங்கள் ஆகும். மேலும் பிறவா நெறித்தலத்திற்கு சான்றாக இறைவன் மரத்தின் விதைகள் மீண்டும் முளைக்காத பிறவாப்புளி, தோன்றிய காலமே அறிய முடியாத இறவாப்பனை என்னும் அதியங்கள் அருள்பாலித்துள்ளார். மேலும் இவ்வூரில் சாணம் புழுப்பதில்லை. இத்தலத்தில் இறப்போர் வலது செவி வான்நோக்கி உயிர்துறப்பர். இவர்கள் வலது செவியில் அம்பிகை ஐந்தெழுத்தை ஓதுவதாக ஐதீகம். | ஏப்ரல் மாதம் | 27.04.2017 சித்திரை 14–ம் தேதி | பிச்சாடனார் அபிஷேகம் | ஸ்ரீ பிச்சாடனார் அபிஷேகம். மாலை 6 மணிக்கு திருவீதி உலா | | |